செய்தி வெளியீடு எண். 237 நாள்: 02.05.2018

# விவசாயிகள் நல்வாழ்வு பணிமனையை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.எம்.நரசிம்மன் ஆகியோர் தொடங்கி வைத்து 25 விவசாயிகளுக்கு ரூ.27 இலட்சத்தி 31 ஆயிரத்தி 838 மதிப்பிலான பல்வேறு வேளாண்மை சம்மந்தப்பட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினர்

திருவள்ளுர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டாரம், வெள்ளியகரம் ஊராட்சியில் வேளாண்மைத்துறை சார்பாக விவசாயிகள் நல்வாழ்வு பணிமனையை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் மற்றும் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.எம்.நரசிம்மன் ஆகியோர் இன்று (02.05.2018) தொடங்கி வைத்து 25 பயனாளிகளுக்கு ரூ.27 இலட்சத்தி 31 ஆயிரத்தி 838 மதிப்பிலான பல்வேறு வேளாண்மை சம்மந்தப்பட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறியதாவது

தமிழக அரசு அறிவிப்புப்படி ஒவ்வொரு கிராமத்திலும் கடந்த 14.04.2018 தேதி முதல் Gram Swaraj Abhiyan கிராம சுயாட்சை முகாம் நடத்தப்பட்டு வருகிறது. வேளாண்துறை மூலம் விவசாயிகள் நலவாழ்வு பணிமனை முகாம் ஒவ்வொரு வட்டாரத்திலும் நடத்தப்பட்டு வருகிறது. விவசாயிகள் நலவாழ்வு பணிமனையில் தமிழக அரசு அறிவிக்கப்பட்டப்படி செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு வேளாண் நலத் திட்டங்கள் விவசாயிகளின் வாழ்வாதாரம் உயரவும் அவர்களுடைய உற்பத்தி இரண்டு மடங்கு அதிகரிக்கவும் மும்மடங்கு வருமானம் பெருகவும் அரசு பல்வேறு நலத் திட்டங்கள் அறிவித்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டம், நுண்ணீர் பாசனத் திட்டம், கூட்டுப் பண்ணைய திட்டம், திருந்திய நெல் சாகுபடி, மண்வள பாதுகாப்பு திட்டம், நீடித்த நிலையான கரும்பு சாகுபடி திட்டம், நீடித்த நிலையான மானாவரி மேம்பாட்டு இயக்கம் ஆகிய திட்டங்களில் விவசாயிகள் அதிகளவில் பங்கு பெற்று உற்பத்தியை அதிகரித்து வருமானத்தை பெருக்கிக்கொள்ள இது போன்ற விவசாயிகள் நல்வாழ்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. வேளாண்மைத் துறை மட்டுமல்லாமல் தோட்டக்கலைத்துறை, வேளாண் பொறியியல் துறை, கால்நடைத்துறை மற்றும் வேளாண் விஞ்சானிகள் அடங்கிய குழுவாக கிராமங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இம்மாவட்டத்தில் கடந்த நிதி ஆண்டில் கூட்டுப் பண்ணையம் திட்டத்தின் கீழ் வேளாண் துறையின் மூலம் 225 உழவர் ஆர்வலர் குழுக்களும், தோட்டக்கலைத்துறை மூலம் 55 உழவர் ஆர்வலர் குழுக்களும் ஆக மொத்தம் 280 உழவர் ஆர்வலர் குழுக்கள் உள்ளடங்கிய 56 உழுவர் உற்பத்தியாளர் குழுக்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு குழுவிற்கும் ரூ. 5 இலட்சம் வீதம் ரூ. 2.80 கோடி அரசு தொகுப்பு நிதி (Corpus Fund) வழங்கப்பட்டு தற்போது 56 குழுக்களும் தங்களுக்குத் தேவையான விசை உழுவை (டிராக்டர்) நெல் நடவு இயந்திரம் (Paddy Transplanter) மற்றும் வேளாண் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டது. இத்திட்டத்தில் வேளாண் இயந்திரங்கள் ஒற்றுமையுடன் பாகுபாடின்றி அனைவருக்கும் பயன்படும் வகையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இத்திட்டத்தில் நடப்பாண்டிலும் கூட 55 FPG குழுக்கள் அமைக்க ஒவ்வொரு வட்டாரத்திலும் இத்திட்டம் புதியதாக உழவர் ஆர்வலர் குழு அமைத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மேலும், பள்ளிப்பட்டு இரா.கி.பேட்டை மற்றும் திருத்தணி பகுதியில் சாகுபடி செய்யப்படாமல் தரிசாக உள்ள தரிசு நிலங்களை தெரிவு செய்து அந்த நிலங்களை இலவசமாக உழவு செய்யவும், விதைகள் மற்றும் இடுபொருட்கள் வழங்க இத்திட்டத்தில் திட்டமிடப்பட்டுள்ளது. தகுதி உடைய விவசாயிகள் பங்கு பெற்று பயனடைய வேண்டும். இந்த திட்டங்கள் வேளாண் துறை மூலம் வெளியிடப்பட்டுள்ள உழவன் செயலியில்

(Uzhavan App) அனைவரும் மேற்படி திட்டங்களை முன்பதிவு செய்து பயனடைய வேண்டும். கடந்த 2017-18-ம் ஆண்டு நமது மாவட்டத்தில் 3.8 இலட்சம் மெ.டன் உணவு தானிய உற்பத்தி செய்து சாதனை அடையப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிற்கு 4.5 இலட்சம் மெ.டன் உணவு தானிய உற்பத்தி செய்ய இலக்கு அளிக்கப்பட்டது. இதனை அனைத்து விவசாயிகளும் அரசு அறிவித்துள்ள பல்வேறு வேளாண் திட்டங்களை பயன்படுத்தி இலக்கினை எய்திட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறினார்.

முன்னதாக 4 உழவர் உற்பத்தியாளர் குழுக்களுக்கு தலா ரூ. 5 இலட்சம் வீதம் மானிய விலையில் 4 விசை உழுவைகளை (டிராக்டர்) ரூ. 24,67,920 மதிப்பிலும், 7 விவசாயிகளுக்கு நுண்ணீர் பாசனத் திட்டத்தில் மழைத்தூவான் கருவிகளை தலா ரூ. 36,174 முழு மானிய விலையிலும், 2 விவசாயிகளுக்கு தலா ரூ.4,480 மதிப்பில் சூரிய விளக்குப்பொறிகள் ரூ. 2000-ம் மானியத்திலும், 2 விவசாயிகளுக்கு தலா ரூ. 120 மதிப்பில் தென்னங்கன்றுகளையும், 5 விவசாயிகளுக்கு விலையில்லா மண்வள அட்டைகளையும், 5 விவசாயிகளுக்கு தலா ரூ. 300 மதிப்பில் ரூ. 150 மானிய விலையில் திரவ உயிர் உரங்கள் வழங்கப்பட்டது. பின்னர், உழுவர் உற்பத்தியாளர் குழுக்களுக்கு திட்ட செயலாக்கம் வாராந்திர அறிக்கை பதிவேடு மற்றும் ரசீது புத்தகங்களும் வழங்கப்பட்டது. விவசாயிகள் நல்வாழ்வு பணிமனை முகாம் குறித்த வேளாண் தொழில்நுட்ப ரதத்தில் விளம்பரம் செய்திட ஒலி பதிவு செய்யப்பட்ட குறுந்தகட்டினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வெளியிட, திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பெற்றுக்கொண்டார். இறுதியாக பணிமனை குறித்த விளம்பர ரதத்தினை மாவட்ட ஆட்சியர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் இணை இயக்குநர் (வேளாண்மை) திரு.ஜி.பாண்டியன், உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) திரு.எபினேசன், உதவி இயக்குநர் (வே) (பள்ளிப்பட்டு) திரு.இ.முனியப்பன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**